©
தமிழ்நாடு அரசு
2009

[Regd. No. TN/CCN/467/2009-11.
[விலை: ரூ. 1.60 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 22] சென்னை, புதன்கிழமை, ஜூன் 10, 2009
வைகாசி 27, திருவள்ளுவர் ஆண்டு–2040

## பகுதி IV—பிரிவு 2இன் இணைப்பு

**2009–ஆம் ஆண்டு மே திங்கள் 20–ஆம் நாளன்று ஆளுநரால் பிறப்பிக்கப்பட்ட பின்வரும் அவசரச் சட்டமானது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது :—**

### தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 1/2009

***1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதோர் அவசரச் சட்டம்.***

இம் மாநிலச் சட்டமன்றப் பேரவையின் கூட்டத்தொடர் நடைபெறாததாலும் இதன் பின்பு காணுகின்ற நோக்கங்களுக்காகத் தாம் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டியதைத் தேவையானதாக்குகின்ற சூழ்நிலைகள் இருந்து வருகின்றன என்று தமிழ்நாடு ஆளுநர் தெளிவுறக் காண்பதாலும் ;

எனவே, அரசமைப்புச் சட்டத்தின் 213–ஆம் உறுப்பின் (1)–ஆம் கூறின்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்தி, ஆளுநர் பின்வரும் அவசரச் சட்டத்தை இப்போது இதன்மூலம் பிறப்பிக்கிறார் :—

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**1.** **(1)** இந்த அவசரச் சட்டம், 2009–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) அவசரச் சட்டம் என வழங்கப்பெறும்.

**(2)** இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 30/1983.

89–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** 1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 89–ஆம் பிரிவில் (1)–ஆம் உட்பிரிவிற்கான வரம்புரையில், ''எட்டு ஆண்டுகள்'' என்று வருகின்ற சொற்றொடருக்குப் பதிலாக "எட்டு ஆண்டுகள் ஆறுமாதங்கள்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

2009–ஆம் ஆண்டு மே திங்கள்
20–ஆம் நாள்.

**சுர்ஜித் சிங் பர்னாலா,**
*தமிழ்நாடு ஆளுநர்.*

**விளக்கவுரை**

தொடக்கநிலைக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில் 2001–ஆம் ஆண்டு மே திங்கள் 25–ஆம் நாளிலிருந்தும், மைய மற்றும் உச்சநிலைக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில் 2001–ஆம் ஆண்டு மே திங்கள் 26–ஆம் நாளிலிருந்தும் ஓராண்டுக்கால அளவிற்கு 1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 89–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவின்கீழ் தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். மேற்சொன்ன கால அளவிற்குள்ளாக மேற்சொன்ன கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை நடத்த இயலவில்லையாதலால், மேற்சொன்ன சட்டத்தைத் திருத்தியதன் மூலம் மேற்சொன்ன பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட தனி அலுவலர்களின் பதவிக்கால அளவானது 2008–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24–ஆம் நாளுக்கும் அப்பால் மேலும் ஆறு மாதங்களைக் கொண்ட ஒரு கால அளவிற்குக் கடைசியாக நீட்டிக்கப்பட்டது. அவர்களின் நியமனக் கால அளவானது தொடக்க நிலைக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில் 2009–ஆம் ஆண்டு மே திங்கள் 24–ஆம் நாளன்றும், மைய மற்றும் உச்சநிலைக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில் 2009–ஆம் ஆண்டு மே திங்கள் 25–ஆம் நாளன்றும் முடிவடைவதாக உள்ளது.

2. கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்துவதற்காக அரசினால் ஏற்பளிக்கப்பட்டவாறான கால அட்டவணையின்படி முதல் கட்டத்தில் முதல் இரண்டு நிலைகளுக்காக தேர்தல்கள் முறையே, 2007–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 7–ஆம் நாளன்றும், 2007–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 11–ஆம் நாளன்றும் நடத்தப்பட்டன. இந்தத் தேர்தல்களின்போது நடைபெற்ற ஒரு சில நிகழ்வுகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. இந்த நிகழ்ச்சிகள் இம்மாநிலத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை நடத்தும் அடிப்படை நோக்கத்தையே தகர்ப்பதாக அரசு கருதுகிறது. அரசானது, கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை அவை எங்கெங்கெல்லாம் நடைபெற்றனவோ, அங்கெங்கெல்லாம் நீக்கம் செய்வதெனவும் அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் புதிய தேர்தல்களை நடத்துவது எனவும் முடிவு செய்து அதற்கிணங்கிய வகையில் ஆணையிட்டுள்ளது. சட்டமன்றத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களையும் கலந்தாய்வு செய்த பின்னர், புதிய தேர்தல்களுக்கான புதிய தேர்தல் கால அட்டவணை ஒன்று உரிய முறையில் அரசினால் அறிவிக்கப்படும்.

3. மேற்சொன்ன பொருட்பாட்டின் காரணமாக, தொடக்கநிலைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை 2009–ஆம் ஆண்டு மே திங்கள் 24–ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னரோ நடத்த இயலாது. அனைத்துத் தொடக்க நிலைக் கூட்டுறவுச் சங்கங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுமங்கள் அமைத்துருவாக்கப்பட்ட பின்னர் மட்டுமே மைய மற்றும் உச்சநிலைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை நடத்தவியலும். எனவே அரசானது, அந்நோக்கத்திற்காக மேற்சொன்ன சட்டத்தைத் தக்கவாறு திருத்துவதன்மூலம் தொடக்கநிலைக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில் 2009–ஆம் ஆண்டு மே திங்கள் 24–ஆம் நாளுக்கு அப்பாலும், மைய மற்றும் உச்சநிலை கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில் 2009–ஆம் ஆண்டு மே திங்கள் 25–ஆம் தேதிக்கு அப்பாலும் மேலும் ஆறு மாதங்களைக் கொண்ட ஒரு கால அளவிற்கு மேற்சொன்ன கூட்டுறவுச் சங்கங்களின் தனி அலுவலர்களின் பதவிக்காலத்தை நீட்டிப்பதென முடிவு செய்துள்ளது.

**4.** இந்த அவசரச் சட்டம் மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.